MC.55/2025

15.10.2025

PW1 – கீதாஞ்சலி க/பெ. அன்புசெல்வம்

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.30 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 01.05 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 15.10.2025

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

குறுக்கு விசாரணை:-

எவ்வளவு காலமாக நீங்களும் உங்கள் கணவரும் பிரிந்து வாழ்கிறீர்கள் என்று சொன்னால் அக்டோபர் 2024 முதல் பிரிந்து வாழ்கிறோம். நீங்களும் உங்கள் கணவரும் சேர்ந்து வாழ்வதற்கு சட்டபடி நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. உங்கள் இருவர் பிரச்சனை தொடர்பாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தாக்கல் செய்த புகார் மனு முடிக்கப்பட்டுவிட்டதா என்றால் ஆமாம். இவ்வழக்கில் உங்கள் கணவர் தாக்கல் செய்திருந்த எதிர் உரையை படித்து பார்த்தீர்களா என்றால் இல்லை. அதன் காரணமாக தான் உங்கள் கணவர் தாக்கல் செய்த எதிர் உரையில் உள்ள சங்கதியை நீங்கள் உங்கள் முதல் விசாரணையில் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் ஜீவனாம்ச வழக்கானது உங்களுக்காக மட்டும் ஜீவனாம்சம்

கோருகிறீர்காளா அல்லது உங்கள் குழந்தைக்காக கோருகிறீர்களா என்றால் எனக்காகவும் குழந்தைக்காகவும் சேர்த்து இருவருக்காக ஜீவனாம்சம் கோருகிறனே். உங்கள் குழந்தைக்காக ஒரு மாதத்திற்கு எவ்வளவு செலவு அதிகபட்சமாக ஆகிறது என்றால் ரூ.20,000/- முதல் 25,000/- ஒரு மாதத்திற்கு குழந்தைக்காக செலவாகிறது. உங்கள் குழந்தைக்கு என்ன வயது என்றால் 6 ½ வயது தனியார் பள்ளியான DBX திருபத்தூரில் முதலாம் வகுப்பு படித்து வருகிறார். நீங்கள் எங்கு தங்கி வருகிறீர்கள் என்றால் ஜோலார்பேட்டையில் என் தாய் வீட்டில் தங்கி வருகிறேன். ஜீவனாம்சம் என்பது போதிய வருமானம் இல்லாதவர்கள் தான் கோரமுடியும் என்பது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். பெங்களூர் ஸ்டீம் லைன் ேஹல்த்கேர் நிறுவனத்தில் எவ்வளவு காலம் பணிப்புரிந்து வந்தீர்கள் என்றால் தற்போது அங்கு பணிபுரியவில்லை. எவ்வளவு காலம் பணிப்புரியவில்லை என்று சொல்லுகிறீர்கள் என்றால் சுமார் 8 மாதம். நீங்கள் பெங்களூரில் மேற்படி நிறுவனத்தில் பணிபுரிந்தபோது உங்களுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.36,000/-. உங்களுக்கு மொத்தம் எவ்வளவு வங்கி கணக்கு உள்ளது என்றால் IDFC வங்கியில் சென்னை கிளையில் வங்கி கணக்கு பராமரித்து வருகிறேன். மேற்படி வங்கி கணக்கில் என்ன பரிவர்த்தனைகள் இடம் பெறுகிறது என்று சொன்னால் என்னுடைய குடும்பத்தினர் கொடுக்கும் தொகை மட்டுமே வங்கி கணக்கில் இடம் பெறும். மாதத்திற்கு உங்கள் வங்கி கணக்கில் எவ்வளவு தொகை வருகிறது என்று சொன்னால் நிரந்தரமாக எதுவும் இல்லை தோராயமாக என் சகோதர சகோதரிகள் ரூபாய் 500 அல்லது 1000 ரூபாய் வரும். என் குடும்பத்தினரே

நேரடியாக எனக்கு செலவு செய்வார்கள் அவசர காலத்தில் எனக்கு தேவையாகும்போது தொகையை என் வங்கி கணக்கில் செலுத்துவரார்கள். உங்களுக்கு நேரடியாக உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மாதத்திற்கு எவ்வளவு செலவு செய்வார்கள் என்றால் ரூ.20,000/− முதல் ரூ.23,000/− வரை செலவு செய்வார்கள். அதிகபட்சம் உங்களுக்கு மாதத்திற்கு ரூ.23,000/− செலவாகுமா என்றால் சரிதான். திருமணமாகி நீங்களும் உங்கள் கணவரும் எவ்வளவு காலம் ஒன்றாக வாழ்ந்திருப்பீர்கள் என்றால் சுமார் 2 ½ ஆண்டுகள் பெங்களூரில் வாழ்ந்தோம். பெங்களூரில் நீங்களும் உங்கள் கணவரும் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் எத்தனை வீடுகள் மாறியிருப்பீர்கள் என்றால் மூன்று வீடுகள். உங்கள் பெற்றோர்கள் எப்போதாவது உங்களுடன் பெங்களூரில் வாழ்ந்து வந்தார்களா என்றால் இல்லை. தற்போதும் நீங்கள் பெங்களூர் ஸ்டீம் லைன் ே ஹல்த்கேர் நிறுவனத்தில் பணிப்புரிந்து மாதம் ரூ.2,00,000/− ஆண்டுக்கு ரூபாய்.24,00,000/− உங்கள் வங்கி கணக்கில் வைப்பீடு செய்யப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் IDFC வங்கி அல்லாமல் வேறு ஒரு வங்கியிலும் நீங்கள் வங்கி கணக்கு பராமரித்து வருகிறீர்கள் என்று சொன்னால் முன்பு பராமரித்து வந்தேன் தற்போது அந்த கணக்கு நடைமுறையில் உள்ளது ஆனால் அதில் நான் பரிவர்த்தனை எதுவும் மேற்கொள்ளாமல் IDFC வங்கியில் மட்டுமே பரிவர்த்தனை மேற்கொள்கிறேன். மற்றொரு வங்கி கணக்கின் விவரம் சொல்ல முடியுமா என்றால் HDFC வங்கி பூந்தமல்லி கிளையில் உள்ளது. உங்கள் கணவர் நீங்கள் பிரிந்து வாழும் பொழுதே குழந்தை பராமரிப்புக்காக உங்களுக்கு தொகை கொடுத்து வந்தார்

என்று சொன்னால் சரியல்ல. நீங்களும் உங்கள் கணவரும் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் உங்கள் கணவர் வேலையில் இல்லாத பொழுது நீங்கள் வேலைக்கு சென்று வந்தீர்கள் என்று சொன்னால் ஒரு ஐந்து மாதங்கள் நான் வேலைக்கு சென்று வந்தேன். இரண்டு மாதம் என் கணவரை வேலையில் இருந்து நீக்கிய பிறகு அந்த இரண்டு மாத காலத்திற்கான சம்பளமும் என் கணவர் பணிபுரிந்த நிறுவனம் அவருக்கு கொடுத்து விட்டது. என் கணவர் வேலையில் இல்லாத அந்த இரண்டு மாத காலம் நாங்கள் செலவு கணக்கை கருதி நாங்கள் ஜோலார்பேட்டையில் வாழ்ந்தோம். மேற்படி இரண்டு மாதம் முடிவதற்கு உள்ளாகவே என் கணவருக்கு வேறு ஒரு நிறுவனத்தில் வேலை கிடைத்து விட்டது. நீங்கள் மேற்படி ஐந்து மாத காலம் எந்த நிறுவனத்தில் பணிப்புரிந்து வந்தீர்கள் என்று சொன்னால் பெங்களூர் ஸ்டீம் லைன் ே ஹல்த்கேர் நிறுவனத்தில் பணிப்புரிந்தேன். தற்போதும் நீங்கள் பெங்களூர் ஸ்டீம் லைன் ே ஹல்த்கேர் நிறுவனத்தில் பணிப்புரிந்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் பணி செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் பணி செய்து தங்களுக்கு வருமானம் ஈட்டி வரும் தகுதி உள்ள காரணத்தினால் நீங்கள் உங்கள் கணவரிடம் ஜீவனாம்சம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. என்னை மேற்படி நிறுவனத்தில் இருந்து பணி நீக்கம் செய்து விட்டார்கள் வேறு எந்த நிறுவனத்திலும் என்னால் குடும்ப பிரச்சனை காரணமாக நேர்காணலுக்கு கவனத்துடன் செயல்படமுடியவில்லை அதனால் வேலை எதுவும் கிடைக்கவில்லை. நீங்கள் பராமரித்து வரும் இரண்டு வங்கி

கணக்கின் வங்கி கணக்கு புத்தகம் உங்களால் அடுத்த வாய்தா தேதி அன்று கொண்டு வர முடியுமா என்றால் முடியும்.

வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K
ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.10.15 15:39:24 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.